SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE
Autonomous
*A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust*
*and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade*
*ENATHUR, KANCHIPURAM - 631 561.*
*Phone : 044-27264066*
*Mail : admin@sankaracollege.edu.in Website : www.sankaracollege.edu.in*

05/07/2025

## MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department** : Tamil

**Venue** : Board Room

**Date** : JULY 5$^{th}$, 2025

**Agenda** : Planning for upcoming subject-oriented events, suggestions, and finalising the panel of examiners for the Academic Council's approval.

**The following members were present in the meeting:**

1. Dr. J. RADHAKRISHNAN, Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Chairman

2. Dr. G. JAYASHREE, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

3. Dr. T.S.JEYALAKSHMI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

4. Dr. S.SIVAGAMASUNDARI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

5. Mr. S. DEIVASIGAMANI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member.

6. Dr. S. NEELAMEGAN, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

7. Dr. N. APPADURAI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

8. Mr. B. VELU, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

9. Mr. M. GANAPATHY, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member

10. Dr. M. ANBAZHAGAN, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member

11. Dr. K.R. VENKATESAN, Principal, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. Nil

*2023 - 24ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறையில் உள்ள பாடத்திட்டம் முழுமையாக மூன்றாம் ஆண்டை நெருங்கும் நிலையில் அதனை நடைமுறைபடுத்திய வகையிலான பின்னூட்டங்களை மதிப்பிடுவதாகவும் நடப்பு பருவத்தில் மேற்கொள்ளவிருக்கும் கல்விசார் நிகழ்வுகள் குறித்த வரைவுகளை உருவாக்கும் வகையிலும் இப்பாடத்திட்டக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு அமைகிறது.*

***1. நிகழ்வுகளின் மதிப்பாய்வு (ஜனவரி - ஜூன் 2025):***

- ***உலகத் திருக்குறள் மாநாடு:***

  *25.01.2025 அன்று '**வள்ளுவரின் மீட்பியல் சிந்தனைகள்**' என்ற தலைப்பில் 16 ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவை (ISBN: 978-93-95394-87-1) வெளியிடப்பட்ட நிகழ்வு உலகம் தழுவிய நிலையில் திருக்குறள் குறித்து 95 இடங்களில், 95 பொதுத்தலைப்புகளில் 1,429 பேர் ஆய்வுக் கட்டுரை வாசித்து சாதனை செய்யப்பெற்ற நிகழ்வின் ஒரு பகுதியாக அமைந்து, லண்டனில் இயங்கும் உலக சாதனை புத்தகத்தில் பதிவுசெய்யப்பெற்ற நிகழ்வாக (27.01.2025) அமைந்தமைக்காக பாடத்திட்டக்குழு மகிழ்ச்சியைப் பதிவுசெய்தது.*

- ***அகத்தியர் தொன்மம்:***

  *பாரதீய பாஷா சமிதி மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையுடன் 10.02.2025 அன்று '**தமிழ் மரபில் அகத்தியர் தொன்மம்**' என்னும் பொருண்மையில் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.*

- ***சூழலியல் மாநாட்டு ஆய்வுக்கோவை வெளியீடு:***

  *2020 பிப்ரவரி மாதம் நடத்த திட்டமிட்ட **சூழலியல் கருத்தரங்கம்** கொரானா தடைகள் காரணமாக தடைபட, இணையவழியாக 04.12.2021 முதல் சனிக்கிழமைதோறும் தொடர் கருத்தரங்கமாக 09.04.2022 வரை நடத்தப்பெற்றது. 22 அமர்வுகளாக நடைபெற்ற இக்கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பெற்ற 181 கட்டுரைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்த நிலையில் அதன் வெளியீட்டு விழா தஞ்சாவூர் சாஸ்திரா பல்கலைக்கழகத்தில்*

*24.02.2025* அன்று **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால்** வெளியிடப்பெற்றது.

- **பயிலரங்குகள்:**

மார்ச் *12* அன்று நடைபெற்ற **'மரபிசைப் பயிலரங்கம்'** மற்றும் கணித்தமிழ்ப் பேரவை வாயிலாக பிப்ரவரி மாதம் முழுமையாக நடத்தப்பட்ட **வலைப்பூ *(Blog)* உருவாக்கம், கூகுள் கருவிகள் பயன்பாட்டுப் பயிற்சிகள்** மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரித்துள்ளன.

- **களப்பயணங்கள்:**

*31.01.2025* முதல் *10.02.2025* வரை நடைபெற்ற **காஞ்சிபுரம் புத்தகத்திருவிழா**விற்கும் வேலைநாள்தோறும் கல்லூரி மாணவர்கள் தமிழ்த்துறை சார்பில் அழைத்துச் செல்லப்பெற்றதுடன் தொடக்க நாள் மற்றும் நிறைவு நாளில் கல்லூரி சார்பில் புத்தகத் திருவிழாவில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. தொடர்ந்து *07/03/2025* மற்றும் *08/03/2025* தேதிகளில் காஞ்சிபுரம் சுகுமாரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற **சென்னை இலக்கியத் திருவிழாவில்** தமிழ்த்துறை மாணவர்கள் கலந்துகொண்டனர். இவை மாணவர்களின் தமிழாளுமைக்கான சிறந்த செயல்வழிக் களமாக அமைந்தன.

*23/02/2025* மற்றும் *24/02/2025* தேதிகளில் திருவாரூர், தஞ்சை, திருச்சி ஆகிய வரலாறு மற்றும் ஆன்மீகத் தலங்களுக்கு கல்விச் சுற்றுலா அமைத்துக்கொள்ளப்பெற்றது. இது, அவர்கள் பயின்ற பக்தி இலக்கியம், கோயிற்கலை, சுற்றுலாவியல், தமிழர் வரலாறும் பண்பாடும் முதலிய பாடங்களுக்கான நேரடி கள அனுபவமாக அமைந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் புதுக்கியதாக அமைந்தது.

இவ்வாறான சென்ற பருவத்தின் தொடர் நிகழ்ச்சிகள் மாணவர்களிடையே நவீன ஆய்வு மனப்பான்மையை உருவாக்கியுள்ளதாக பாராட்டப்பட்டது. தொடர்ந்து இவ்வாறாக அமைக்கவும் குழுவால் பரிந்துரைக்கப்பெற்றது.

*2.* **பாடத்திட்டச் சீரமைப்பு ஆலோசனைகள்:**

*2023 – 24* ஆம் கல்வியாண்டில் நடைமுறைக்கு வந்த பாடத்திட்டத்தில் முழுதுகலை மற்றும் பொதுத்தமிழ் பாடத்திட்டங்கள் முழுமையாக நான்கு பருவமும் நடத்தப்பெற்ற நிலையில் அதன் பின்னூட்டங்கள் அவற்றை நடத்திய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் பெறப்பட்டு அவற்றின் தேர்வு முடிவுகளும் அலசி ஆராயப்பெற்றன. முந்தைய பாடத்திட்டக்குழுக்களில் விவாதிக்கப்பெற்ற பாடங்களைத் தொடர்ந்து புதியாக நடமுறைக்கு வந்திருக்கும் இளங்கலை ஐந்தாம் பருவத்தாள் மற்றும் ஆறாம் பருவத்தாள் குறித்தும் விவாதிக்கப்பெற்றது. அவற்றின் நிறைவில் ஆறாம் பருவமும் முடிகின்ற நிலையில் அனைத்து கருத்துக்களையும் உள்ளடக்கி புதிய பாடத்திட்டத் திருத்தத்தைக் கொண்டுவரலாம் என முடிவுசெய்யப்பெற்றது.

- மொழிப்பாடப் பகுதிகளில் மாணவர்களின் சுமையைக் குறைக்க, மிக விரிவாக உள்ள இலக்கிய வரலாற்றைப் பருவ வாரியாகச் சரிசமமாகப் பிரித்து வழங்குவது குறித்துத் தொழில்நுட்ப ரீதியாக விவாதிக்கப்பட்டது.

- தமிழக வரலாறு மற்றும் அறிவியல் தமிழ் ஆகிய தாள்களை மாணவர்களின் சுயமாகக் கற்றல் திறனோடு *(Self-learning tools)* இணைத்து மேம்படுத்தும் முறைகளை அடுத்த பாடத்திட்டக் குழு சீரமைப்பில் முன்னெடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

***3. நிறைவாண்டு மாணவர்களுக்கான வழிகாட்டல்:***

கடந்த கூட்டத்தில் திட்டமிடப்பட்டவாறு, நிறைவாண்டு மாணவர்கள் **காஞ்சிபுரத்துக் கோயில்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைக்குழுக்கள்** குறித்துத் தயாரித்துள்ள **திட்டக்கட்டுரைகள் *(Projects)*** உயர் தரம் கொண்டிருப்பதைப் புறநிலைத்தேர்வாளர்கள் பெரிதும் பாராட்டியமையும் மாணவர்கள் மிகுந்த உற்சாகமுடனும் செயல்பட்டமையும் பகிர்ந்துகொள்ளப்பெற்றது. கடைநிலை மாணவர்களும் கள ஆய்வு மற்றும் ஆய்வேடு தயாரிக்கும் செயல்பாட்டால் கணினி, நேர்காணல், சுயமாக கற்றல் உள்ளிட்ட மென்திறன்களில் சிறந்து ஆளுமை பெற்றமை குழுவால் நேரடியாக உணரப்பெற்றது. ஒப்படைக்கப்பெற்ற திட்டக்கட்டுரைகள் உரிய மேற்பார்வையாளர் மற்றும் வல்லுநர் குழுவால் மேலும் செறிவாக்கப்பெற்று நூல்களாக வெளியிட முதல்வரிடம் பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

தமிழ்த்துறை இதுவரை நடத்திய கருத்தரங்க நூல்கள் அவற்றின் கட்டுரைகள் அடைவு செய்தல், சங்கரா பதிப்பக நூல்களின் அடைவு, கல்லூரி நூலகத்தில் உள்ள தமிழ் நூல்கள் குறித்த அடைவு ஆகியன மாணவர்களின் திறனைப் பலப்பட உயர்த்தியதுடன் துறைக்காக காலங்கடந்த கருவூலமாக அமைந்ததாகப் பாராட்டப்பெற்றன. அதே போல நடப்புக் கல்வியாண்டிலும் முதுகலை மாணவர்கள் மூலம் துறை நூலக நூல் அடைவு செய்ய திட்டமிடப்பெற்றது.

சென்ற பருவத்தில் சமச்சீர் பாடத்திட்டங்களில் இலக்கிய வகைகள், இலக்கணங்கள் பயில்வு குறித்த மதிப்பீடு செய்யும் ஆய்வுகள் அவர்களின் வேலைவாய்ப்புக்கு, போட்டித்தேர்வுகளுக்கு உதவும் வகையில் அமைந்ததாகப் பாராட்டப்பெற்றன. அதே வகையில் நடப்புப் பருவத்தில் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களைத் திரட்டி அவற்றினை இலக்கிய வகை அடிப்படையில் தொகுப்பது, நாட்டுடமையாக்கப்பட்ட ஆளுமைகளின் நூல்களை அடைவு செய்யச்செய்வது உள்ளிட்ட பொருண்மைகளில் திட்டக்கட்டுரைகளை அமைக்க பரிந்துரைக்கப்பெற்றது.

***4. தேர்வுக் குழுப் பட்டியல் (Panel of Examiners):***

நவம்பர் *2025* பருவத் தேர்விற்கான புதிய வினாத்தாள் தயாரிப்பாளர்கள் மற்றும் புறநிலை மதிப்பீட்டாளர்கள் அடங்கிய நிபுணர் பட்டியலை ஆய்வு செய்து இறுதி செய்யப்பட்டது. இப்பட்டியல் ஒப்புதலுக்காகக் கல்வி அலுவல் குழுவுக்கு *(Academic Council)* அனுப்பி வைக்கப்பட்டது.

**Signature of Members:**

1. Dr. J. RADHAKRISHNAN -
2. Dr. G. JAYASHREE -
3. Dr. T.S.JEYALAKSHMI -
4. Dr. S. SIVAGAMASUNDARI -
5. Mr. S. DEIVASIGAMANI -
6. Dr. S. NEELAMEGAN -
7. Dr. N. APPADURAI -
8. Mr. B. VELU -
9. Mr. M. GANAPATHY -
10. Dr. M. ANBAZHAGAN -
11. Dr. K.R. VENKATESAN -